# இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 மார்ச் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 08.03.2019 ந் தேதி காலை 11.35 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:–

**பொருள் 1**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் மார்ச் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண்.851**– பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் 2**

இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை–600 005 அவர்களது ந.க.எண்.257/2018/P1–2, நாள்.06.12.2018–ந்தேதி கடிதத்தின்படி பின்தங்கிய மாவட்ட வளர்ச்சிக்கு, இந்திய அரசு (HUDCO) பெறு நிறுவன சமூக பொறுப்பு நிதி (Corporate Social Responsibility Grant-CSR) உதவியுடன் திட்டங்கள் செயல்படுத்துவதற்கு இராமநாதபுரம் நகராட்சியில் இருந்து பிரேரணை கோரப்பட்டது. அதன்படி கீழ்க்கண்ட பணியினை எடுத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் நகராட்சி எம்.எஸ்.கே.தொடக்கப்பள்ளியில் கழிப்பறை மற்றும் ஆசிரியர் அறை (Toilet and Staff Room ) கட்டுதல் | ரூ.10.00 லட்சம் |
| 2 | வள்ளல் பாரி பள்ளி வளாகத்தில் வகுப்பறைகள் கட்டும் பணி | ரூ.40.00 லட்சம் |

மேற்கண்ட பணியினை, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (HUDCO) சமூக பொறுப்பு நிதி (CSR – Fund)–ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டப் பிரேரணை சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.5255/2018/இ1
**தீர்மானம் எண்.852**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 3**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், கழிவு நீர் அகற்றும் நிலையம், கழுகூரணி கிராமத்தில் இயங்கி வருகின்றது. இதற்கு Consent of Operator 2019–2020"கான புதுப்பித்தல் கட்டணம் (Renewal) ரூ.1,44,480/–ஐ *District Eviromental Engineer Tamil Nadu Pollution Control Board* Payable of Sivagangai என்பவர் பெயருக்கு வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பட்டியல் தொகை வழங்குவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.8946/2000/இ1

**தீர்மானம் எண்.853**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 4**

இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட நகர் பகுதியான சந்தை பேட்டை சாலையில் இயங்கி வரும் ஆடடி சாலை (Slaughter House)–க்கு Renewal புதுப்பித்தல் 2019–2020 ஆண்டிற்கான கட்டணம் ரூ.14,800/–ஐ *District Eviromental Engineer Tamil Nadu Pollution Control Board* Payable of Ramanathapuram* என்பவர் பெயருக்கு வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பட்டியல் தொகை வழங்குவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.4420/2016/இ1

**தீர்மானம் எண்.854**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 5**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் டம்பர் பிளேசர்–I வாகனம் TN65-H–4759–க்கு ஹைட்ராலிக் பம்பு சர்வீஸ், ஹைட்ராலிக் ஆயில் ஆகிய பணிகள் இருப்பதால், இதற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.855**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொரு.ள் 6**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் Compactor லாரி TN65-AD-1899க்கு, லிப்ட், ஹீல் தகடு மாற்றும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.35,870/– |
| 2) | A.R.இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.42,020/– |
| 3) | ஸ்ரீவிக்னேஷ் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.38,625/– |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்ட N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்விலைப்புள்ளியை எற்று மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.856**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 7**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் Compactor லாரி TN65-AD-1899"க்கு லிப்ட், ஹீல் தகடு மாற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.36,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3915/2019/எச்1

**தீர்மானம் எண்.857**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 8**

## 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் துாக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல்(Storage) வழங்குதல்(Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல்(Sale) மற்றும் பகிர்ந்தளித்தல (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துனை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.

1. (i) **செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

   (ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

   (iii) **மேல்முறையீட்டு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

   (iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்**:
   இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே(Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

2 **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**

I. மொத்தமாக (Whole sale) சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்

II. வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

IV. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

3. **இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:-**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.

துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்

4. அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **மேல் முறையீட்டுக்கு உரிமை:-**

இராமநாதபுரம் நகராட்சி நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் இராமநாதபுரம் நகராட்சி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

6. **தண்டனைகள் விபரம்:-**

**அட்டவணை II**

**பிரிவு 306 (28-A)-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 |
| iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

**(ந.க.எண்.665/2019/எச்1)**

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.858</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 9**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் டிராக்டர் TN65-C–9697 க்கு தகுதிச்சான்று முடிவடைவதால் மீண்டும் புதுப்பித்து பழுதுப்பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5385/2018/எச்1

**தீர்மானம் எண்.859**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 10**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் வகானம் TN65-A–3904 க்கு தகுதிச்சான்று முடிவடைவதால் மீண்டும் புதுப்பித்து பழுதுப்பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.628/2019/எச்1

**தீர்மானம் எண்.860**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 11**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் கழிவு நீர் வாகனம் TN65-A–5309 க்கு தகுதிச்சான்று முடிவடைவதால் பழுதுப்பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.861**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள்12**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 07.03.2019–ம் தேதிய ந.க.எண்.50977/2018/டிபி3 சுற்றறிக்கையின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 – விதி எண்.23ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இந்நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிக்குள் கட்டிட விண்ணப்பங்கள் தயார் செய்யும் பணிக்கு தொழில் சார்ந்த வல்லுனர்கள் நியமனம் செய்ய நடைமுறையில் பரிசோதனைக் குழுவில் (Screnning Committee) தலைவராக நகராட்சி ஆணையாளர், உறுப்பினராக நகராட்சி பொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வர்கள்

இருவர் அடங்கிய நான்கு உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைத்திட உத்திரவிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மேற்காணும் உறுப்பினர்கள் கொண்ட பரிசோதனைக்கு அமைத்திடவும் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 7 வரையிலான நிபந்தனைகளுக்கு உட்பட்டு பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0839/2019/எப்1)

**<u>தீர்மானம் எண்.862</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள்13**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் –2019 தொடர்பாக, அரசாணை (பல்வகை) எண்–18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.I)துறை நாள்.04.02.2019ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, நாள்.04.02.2019ல் வெளியிடப்பட்டுள்ளது.மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.839/2019/எப்1)

**<u>தீர்மானம் எண்.863</u>–** பார்வையிட்டு பதிவு அனுமதிக்கப்படுகின்றது.

**<u>பொருள் 14</u>**

இராமநாதபுரம் நகராட்சிப் பகுதியில் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பத்தின் பேரில் வசூலிக்கப்படும் கட்டிட உரிமையாணை கட்டணங்கள் அரசு ஆணை நிலை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(ந.நி1) நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் –2019 விதி எண்.14ன்படி நகராட்சியில் வழங்கப்படும் கட்டிட உரிமம் காலம் மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளாக மாற்றியமைக்கப்பட்டதின்படி கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டு திருத்திய கட்டிட உரிமையாணை மற்றும் இதர கட்டணங்கள் நிர்ணயம் செய்து 01.05.2019 முதல் கீழ்க்கண்டவாறு வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| திருத்திய கட்டண விபரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | தமிழ்நாடு நகரட்சிகளின் சட்ட விதி மற்றும் பிரிவு | உரிமையாணை கோரும் இன விபரம் | 01.10.2016 முதல் உள்ள கட்டண விகிதம் | 01.05.2019 முதல் திருத்திய கட்டண விகிதம் | அளவு | உரிமையாணை காலம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 175, 176 | புதிதாக மனைப்பிரிவு செய்து சாலை அமைக்க | 10000 | 1000 | ஒவ்வொரு 500 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு | 1 தடவை |
| 2 | 175, 176 | மனை உட்பிரிவு செய்ய | 1000 | 250 | ஒவ்வொரு மனைக்கும் | 1 தடவை |
| 3 | 183(2) | தெருக்களில் போக்குவரத்து இடையூறு இன்றி பந்தல் மற்றும் தற்காலிக ஆக்கிரமிப்புகளுக்கு (கோவில் திருவிழா, ஈமச்சடங்குகள், அரசியல் காரியங்கள், திருமணம் மற்றும் நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட மார்ச் முதல் மே முடிய மட்டும் வேணல் பந்தல்களுக்கு அனுமதி இலவசம்) | 200 | 20 | 1 சதுர மீட்டர் | 1 வாரம் |
| 4 | 183(2) | 1. தெருக்களின் ஓரங்களில் போக்குவரத்திற்கு இடையூறின்றி கட்டிட சாமான்கள் கல், மண் மற்றும் அதன் இனங்கள் வைத்துக் கொள்ள குறைந்த பட்ச கட்டணம் | 1000 | குறைந்த பட்சம் ரூ.2000/– அல்லது கட்டுமான அளவிற்கு ச.மீ.க்கு ரூ.50/– | 1 சதுர மீட்டருக்கு | கட்டிட பணி முடியும் வரை |
| 5 | 197 | கட்டிட மனை அங்கீகாரம் செய்ய (மனையின் பரப்பு) 1 ச.மீ | 500 | 1000 | 200 சதுர மீட்டர் வரை | 5ஆண்டுகள் |
| | | கட்டிட மனை அங்கீகாரம் செய்ய (மனையின் பரப்பு) 1 ச.மீ | 1000 | 1500 | 200 சதுர மீட்டருக்கு மேல் | 5ஆண்டுகள் |
| 6 | 199 | புதிதாக கட்டும் மாற்றியமைக்கும் தார்சு குடியிருப்பு கட்டிடத்திற்கு | | | | |
| | | 1. ஸ்டில்ட் தளம் | –– | 500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 2. தரைதளம் | 350 | 500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 3. முதல்தளம் | 500 | 600 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 4. 2ம் தளம் | 750 | 1000 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 5. 3ம் தளம் மற்றும் அதன் மேல் உள்ள மாடிக்கு | 1000 | 1500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| 7 | 199 | குடியிருப்பு அல்லாத தொழிற்சாலை கடை அலுவலகம் பள்ளி கிடங்கு போன்ற வியாபர கட்டிடங்களுக்கு | | | | |
| | | 1. ஸடில்ட் தளம் | -- | 600 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 2. தரைதளம் | 600 | 600 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 3. முதல்தளம் | 1500 | 1500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 4. 2ம் தளம் | 2000 | 2000 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 5. 3ம் தளம் மற்றும் அதன் மேல் உள்ள மாடிக்கு | 2500 | 2500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| 8 | 197(1) | பக்க எல்லை சுற்றுச்சுவர் கட்டுமானம் செய்ய | | | | |
| | | 2.4 மீ உயரத்திற்கு உட்பட்டு | 200 | 500 | 1 மீ நீளத்திற்கு | 5ஆண்டுகள் |
| | | 2.40 மீ உயரத்திற்கு மேல் | 300 | 600 | 1 மீ நீளத்திற்கு | 5ஆண்டுகள் |
| 9 | 197(1) | சுவர் மராமத்து தளம் பூச்சு போன்ற மராமத்து வேலைகள் செய்ய (கட்டுமான அமைப்பில் எவ்விதமான மாற்றம் செய்யாமல்) | 2000 | 5000 | --- | 1 தடவை |
| 10 | 197 | மாடிப்படிக்கட்டு கட்டுமானம் | 1500 | 1500 | ஒவ்வொரு தளத்திற்கு | 5ஆண்டுகள் |
| 11 | 197 | குளியலறை கட்டுமானம் | 500 | 600 | ஒவ்வொரு தளத்திற்கு | 5ஆண்டுகள் |
| 12 | 197 | மல இருக்கை | 500 | 600 | ஒவ்வொரு தளத்திற்கு | 5ஆண்டுகள் |
| 13 | 207 | கிணறு/குழாய் கிணறு | 1000 | 1000 | மனை ஒன்றிற்கு | 5ஆண்டுகள் |
| 14 | | கட்டிட விண்ணப்பம் கூர்ந்தாய்வு கட்டணம் | --- | 500 | விண்ணப்பம் ஒன்றிற்கு | 1 தடவை |
| 15 | | திருப்பி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் திரும்ப சமர்ப்பிக்க | 300 | 500 | விண்ணப்பம் ஒன்றிற்கு | 1 தடவை |
| 16 | | கட்டிட அனுமதி வரைபட நகல் | 500 | 600 | நகல் ஒன்றுக்கு | 1 தடவை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | | கட்டிட வரைபட வரைவாளர் பதிவு கட்டணம் | 3000 | 5000 | 1 நபர் | ஒரு வருடத்திற்கு |
| 18 | | கட்டிட வரைபட வரைவாளர் புதுப்பித்தல் கட்டணம் | 2500 | 5000 | 1 நபர் | ஒரு வருடத்திற்கு |
| 19 | | கேபிள் டி.வி.வீடியோ லைப்ரரி மற்றும் நகராட்சியின் தடையின்மை சான்று பெறும் இனங்களுக்கு | 2500 | 5000 | ஒன்றிற்கு | 1 தடவை |
| 20 | | முழுமை திட்ட பயன்பாடு குறித்த சான்று வழங்க | 1300 | 1500 | ஒன்றிற்கு | 1 தடவை |
| 21 | பி.பி.ஆர். சட்டம் | பி.பி.ஆர்.சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் தற்காலிக பந்தல் அமைக்க | 500 | 600 | 10ச.மீ | |
| 22 | | பொருட்காட்சி மற்றும் வியைாட்டு அரங்கம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்க | 800 | 1000 | 10ச.மீ | 1 மாதம் மட்டும் |
| 23 | 183 | சர்வே கட்டணம் | | | | |
| | | 1) புலப்பட நகல் | 500 | 600 | 1 நகரளவு எண்ணிற்கு | 1 தடவை |
| | | 2) நிலப்பதிவேடு நகல் | 500 | 600 | 1 நகரளவு எண்ணிற்கு | 1 தடவை |
| | | 3) எப் லைன் அளக்க | 500 | 600 | 1 நகரளவு எண்ணிற்கு | 1 தடவை |
| | | 4) உட்பிரிவு கட்டணம் | 500 | 600 | 1 நகரளவு எண்ணிற்கு | 1 தடவை |
| 24 | | நன்னிலை வரி ஒவ்வொரு இனங்களுக்கு ரூ.300/— அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் | 300 | 300 | | |
| 25 | | தொழிலாளர் நல நிதி தொகை தற்போதுள்ள சந்தை மதிப்பீட்டின்படி சதுர அடிக்கு ரூ.1400/— வீதம் கட்டிடப் பணி மேற்கொள்ளபடுவதால் | 130 | 130 | 1 ச.மீ. | 1 தடவை |
| 26 | | அபிவிருத்தி கட்டணம் நிலத்திற்கான கட்டணம் | ரூ..2/1ச.மீ | 2 | 1 ச.மீ. | 1 தடவை |
| 27 | | கட்டிட அனுமதிக்கப்படும்<br><br>இடத்திற்கான கட்டணம் குடியிருப்பு | ரூ.10/1ச,மீ | 10 | 1 ச.மீ. | 1 தடவை |
| 28 | | வணிகம்,கல்வி உபயோகம் மற்றும் பிற | ரூ.20/1ச,மீ | 20 | 1 ச.மீ. | 1 தடவை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வகையான உபயோகம் | | | | |
| 29 | | அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபட நகல் வழங்க | --- | 1500 | நகல் ஒன்றிற்கு | 1 தடவை |
| 30 | | முழுமை திட்ட நிலஉபயோகம் மாற்றம் குறித்து பெறப்படும் விண்ணப்பங்கள் மேலனுப்பி வைக்க | --- | 5000 | விண்ணப்பம் ஒன்றிற்கு | 1 தடவை |
| 31 | | கட்டிட அனுமதி மேல்முறையீடு விண்ணப்பம் நகர் ஊரமைப்பு துறைக்கு மேலனுப்பி வைக்க | --- | 5000 | விண்ணப்பம் ஒன்றிற்கு | 1 தடவை |
| 32 | | விளம்பர கட்டணம் | | | | |
| | | 1) நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் பிரதான சாலைகள் | --- | 300 | 1 ச.மீ. | ஆறு மாதத்திற்கு |
| | | 2) பிற சாலைகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் | --- | 250 | 1 ச.மீ. | ஆறு மாதத்திற்கு |
| 33 | | தரை வாடகை | | | | |
| | | 1) நகராட்சி இங்கள் மற்றும் சாலைகள் | --- | 250 | 1 ச.மீ. | ஆறு மாதத்திற்கு |

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட கட்டிட உபவிதிகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு உரிய செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.839/2019/எப்1)

**தீர்மானம் எண்.864**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 15**

இராமநாதபுரம் நகராட்சி , தூய்மை இந்தியா திட்டம் 2018–2019ன் கீழ் முதல் நிலை திடக்கழிவு சேகரப் பணிக்காக சிறிய இலகுரக வாகனம் (Light Commercial Vehicle) LCV 3 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு 14.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க;ணடவாறாக 1 ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றன.

| | |
|---|---|
| 1) | M/s Lakhsmi Auto Diesel Work,<br>Workshop Corner,<br>Salem Main Road,<br>Mettur Dam- 626 401 |

மேற்கண்ட பணிக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளதால் அவ்வொந்தப்புள்ளியை நிராகரிக்கப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.138/2019/இ1

**தீர்மானம் எண்.865–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

**பொருள் 16**

இராமநாதபுரம் நகராட்சி, அவசர அவசியம் கருதி சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் டிசம்பர் –2018 முதல் 08.03.2019 வரையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக செலவினம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1)இராமநாதபுரம் நகராட்சி, பொதுசுகாதாரப்பிரிவு *பிளாஸ்டிக் மாசில்லா தமிழகம்* என்ற விழிப்புணர்வு நிகழ்வு தொடர்பாக தமிழக முதல்வர் அவர்களால் 23.08.2018–ம் தேதியன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. அதன் பேரில் இராமநாதபுரம் நகராட்சியில் விழிப்புணர்வு, ஊர்வலம், பிரச்சாரம், நடைபெற ரதம், மைக்செட்கள், விளம்பர பலகைகள், நிகழ்ச்சியை ஆவணப்படுத்துதல், பங்கேற்பாளர்களுக்கு சிற்றுண்டி வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொண்டதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 35,300/– |
| 2)இராமநாதபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள முகவை ஊரணி OHT–யிலிருந்து தண்ணீர் விநியோகம் செய்யக்கூடிய குடிநீர் குழாயில் கழிவு நீர் கலந்து மாசு ஏற்படுவதினை சரி செய்து விநியோகம் செய்தமைக்கு பட்டியல் தொகை வழங்க முறையே | 4,460/- |
| 3)இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–12, பாலசுப்பிரமணியசுவாமி கோவில் தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி OHT–வால்வு பழுதாகியுள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுத்தமைக்கான பட்டியல் தொகை வழங்க முறையே* | 4,500/– |
| 4)இராமநாதபுரம் நகராட்சி, GAJA புயலினை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடுகள் அமர்த்தி மேற்கொண்ட வகையில் பட்டியல் தொகை வழங்கி முறையே | 36,000/– |
| 5)இராமநாதபுரம் நகராட்சி, பட்டிணம்காத்தான் குப்பை கிடங்கில் குப்பை பிரிக்கும் (Processing Unit) எந்திரத்திற்கு மின் இணைப்பு செல்லும் Cable பழுதடைந்துள்ளதை மாற்றி புதிதாக வாங்கி பொருத்தும் பணி மேற்கொண்டதற்கு பட்டியல் தொகை வழங்க முறையே | 17,097/– |
| 6)இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், 2018–19 காட்டு பிள்ளையார் கோவில் தெருவில் கழிவுநீர் வெளியேற்றும் நிலையம் Zone-IVல் உள்ள 15HP நீர்மூழ்கி | |

| | |
|---|---|
| மின்மோட்டாரில் உள்ள காயில் எரிந்து பழுதாகியுள்ளதற்கு பழுதுநீக்கம் அகற்றி, இயக்கி கொடுக்கும் பணி மேற்கொண்டதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 83,350/– |
| 7)இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2018–19, இந்திரா நகர் வெளியேற்றும் நிலையத்தில் உள்ள 75HP நீர்மூழ்கி மின்மோட்டார் பேரிங் மற்றும் ஆயில் சீல்டு மெக்கானிக் சீல்டு பழுதாகியுள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுத்தமைக்கு பட்டியல்தொகை வழங்கிய முறையே* | 74,650/– |
| 8)இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2018–19, நகராட்சி பராமரிப்பில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு மின்விளக்கு அமைத்து கொடுக்கும் பணிமுடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே | 9,470/– |

**<u>அலுவலக குறிப்பு</u>–** தமிழ்நாடு மாநில நகராட்சி சட்டம் 1920–விதி 15–ன் கீழ் மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.866</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகின்றது.

.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி